## 1. தலைப்பு 130 – உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 11 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) மற்றும் (ஆ) இலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 1.4 இலிருந்து 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 4,760,914,770 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 3,179,374,946 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,581,539,824 அதாவது 33 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவுகள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 249,284,770 | 229,846,949 | 19,437,821 | 8 |
| மூலதனம் | 4,511,630,000 | 2,949,527,997 | 1,562,102,003 | 35 |
| மொத்தம் | 4,760,914,770 | 3,179,374,946 | 1,581,539,824 | 33 |

**(ii) பாதீட்டு முரண்**

பின்வரும் முரண்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 189,753,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

- 30 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 6 சதவீதம் தொடக்கம் 97 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | இழிவு எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 13001 | 8,000,000 | 7,284,765 | 4,000,000 | 5,229,486 | 35,000,000 | 24,611,862 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

13001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 557,197 ஆக இருந்தது. நிலுவையான மீதியில் 3 வருடங்கள் தொடக்கம் 4 வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற வேலைநீக்கஞ் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 143,200 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அந்த அறிக்கை 2014 யூன் 09 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.5 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| சனாதிபதி செயலகத்தின் சுற்றுநிருபம் | |
| 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றுநிருபம் | |
| (i) 3.1 ஆம் பந்தி | அமைச்சரின் பாவனைக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒதுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் அமைச்சரின் பாவனைக்காகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் அமைச்சருக்கு ஏழு வாகனங்களும் பிரதி அமைச்சருக்கு மூன்று வாகனங்களும் மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ii) 2.1 ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் கீழ் இரண்டு சாரதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்த முடியுமான போதிலும் அமைச்சருக்காக ஐந்து சாரதிகளும் பிரதி அமைச்சருக்காக மூன்று சாரதிகளும் ஒதுக்கப்பட்டிருந்தனர். |

## 1.6 நோக்கங்களுக்கு முரணான செலவினம்

தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் நோக்கங்களுக்கு முரணான செலவினங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2013 செப்தெம்பர் 09 ஆந் திகதி முதல் 15 ஆந் திகதி வரை பெயரிடப்பட்ட உள்ளூராட்சி வாரத்திற்காக வருடாந்த பாதீட்டிலிருந்து ரூபா 5,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 4,977,262 தொகை செலவிடப்பட்டு 2012 இன் உள்ளூராட்சி மாநாடு நடாத்தப்பட்டிருந்தது. உள்ளூராட்சி வாரத்திற்காக எத்தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 5,000,000 நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 4,032,285 தொகை செலவிடப்பட்டு இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 25 | 02 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 137 | 108 | 29 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 54 | 38 | 16 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த) | - | 12 | - | 12 |
| | மொத்தம் | 222 | 186 | 48 | 12 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

48 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.